## இணையதள அறிவிக்கை

ந.க.எண் : 176/2021/ஆ1

நாள்.09.02.2021

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**ஆனைமலை வட்டாரம்**

**அறிவிக்கை (Notification)**

**கிராம ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய கீழ்க்கண்ட கிராம ஊராட்சிகளில் நாளது வரை ஏற்பட்டுள்ள ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களின் விவரம்**

| வ. எண் | ஊராட்சி செயலர் பதவியிடம் காலியாக உள்ள ஊராட்சியின் பெயர் | இனசுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|
| 1 | தாத்தூர் | ஆதிதிராவிடர் | - |

**தகுதிகள் :-**

1.காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்..

| இனம் | வயது (01.07.2020 அன்று) | கல்வித்தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும் சீர்மரபினர்)/ பிற்படுத்தப்பட்டோர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |

அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசாணை நிலை எண்.72, (இ5) நாள்- 9.07.2013, அரசாணை நிலை எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை (T2) நாள்- 11.03.2015, மற்றும் அரசாணை நிலை எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்1) துறை நாள் - 19.04.2017, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி செயலாளர் அவர்களின் கடித எண்.MS1, நாள்- 02.01.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை வழக்கு எண்.MP(MD) 2/2014 and 1/2015 in WP(MD) 12032/2014, MP(MD) 2/2013 and 1/2015 in WP(MD) 16884/2013 and WMP(MD) 1166/2016 and 3240/2016 in WP(MD) No 1393/2016 ன் பேரில் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவிற்கு உட்பட்டு நிரப்பப்படும்.

நிபந்தனைகள்

1.விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

2.இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.ஒவ்வொரு கிராம ஊராட்சிப் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

4. தகுதியான விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட ஊராட்சியில் இல்லாவிட்டால் அவ்ஊராட்சியின் எல்லையை ஒட்டிய ஊராட்சியிலிருந்து விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்த நபர்கள் பரிசீலனை செய்யப்படுவர்.

5. அரசு விதிகளின் படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு 7வது திருத்திய ஊதியக் குழு பரிந்துரைகளின்படி அட்டவணை (Pay Matrix Table Level-2) (நிலை -2 15900-50400) மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் தொடர்புடைய ஊராட்சியின் ஊராட்சி மன்ற தலைவர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 17.02.2021 புதன் கிழமை) அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்

ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையதள(National Career Service Portal) www.ncs.gov.in மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட இணையதள **https://coimbatore.nic.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

R.அன்னபூரணி

**கிராம ஊராட்சி தலைவர்**
**தாத்தூர் ஊராட்சி**
**ஆனைமலை வட்டாரம்**
**கோயம்புத்தூர் மாவட்டம்,**

# இணையதள அறிவிக்கை

## கோயம்புத்தூர் மாவட்டம்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு

## கிராம ஊராட்சி செயலர் பணிக்கான விண்ணப்பம்

**(விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: .02.2021)**

**குறியீடு எண்:**

(பொருத்தமான இடத்தில் ✓செய்யவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | | புகைப்படம் (கையொப்பத்துடன்) |
| 2. | பாலினம் | ஆண்/ பெண்/ திருநங்கை | |
| 3. | விண்ணப்பிக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | | |
| 4. | விண்ணப்பிக்கும் ஊராட்சியின் பெயர் | | |
| 5. | விண்ணப்பிக்கும் ஒதுக்கீடு (பொருத்தமானவற்றை✓செய்யவும்) | | |
| 6. | தந்தை / கணவர் பெயர் | | |
| 7. | நிலையான முகவரி | கதவு எண்: <br> தெரு பெயர்: <br> கிராமம்: <br> ஊராட்சியின் பெயர்: <br> அஞ்சல்: <br> பின் கோடு: | |
| 8. | விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் ஊராட்சியை சார்ந்தவரா? | (ஆம் / இல்லை) | |
| 9. | இல்லை எனில் விண்ணப்பதாரர் குடியிருந்து வரும் ஊராட்சியின் பெயர் | | |
| 10. | விண்ணப்பதாரரின் விபரம் <br> அ) தொலைபேசிஎண் <br> ஆ)கைபேசிஎண் <br> இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 11. | பிறந்த தேதி | DD / MM / YYYY | |
| 12. | வயது (01.07.2020 தேதியில்) (BC / MBC / SC / ST 18 - 35 Others - 18 - 30 க்கு மிகாமல்) | | |

| | | |
|---|---|---|
| 13. | இனம் (பொருத்தமானவற்றை ✓ செய்யவும்) | General / BC / BC(M) / MBC / SC / SC(A) / ST |
| 14. | வேலைவாய்ப்பு பதிவு விபரம் (இருப்பின்) | பதிவுஎண்: <br> பதிவுநாள்: <br> புதுப்பிக்கப்பட வேண்டிய நாள்: |
| 15. | அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா? | ஆம்/ இல்லை |
| 16. | ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை? (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | முன்னாள் இராணுவத்தினர் <br> கலப்புத் திருமணம் செய்தவர் <br> மாற்றுதிறனாளி: (மாற்றுத் திறனாளி சதவீதம் (ம) அடையாள அட்டைநகல் இணைக்கப்படவேண்டும் <br> ஆதரவற்ற விதவை/விதவை (உரிய அலுவலரின் சான்று நகல் இணைக்கப்படவேண்டும்). <br> இதர முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிடவேண்டும்) |
| 17. | கல்வித்தகுதி (10 - வது வகுப்பு தேர்ச்சி) | |
| 18. | மதம் | இந்து / முஸ்லீம் / கிறிஸ்தவம் / பிற |

| | கீழ்கண்ட சான்று நகல்களை இணைத்துள்ளேன் | (பொருத்தமானவற்றை ✓செய்யவும்) |
|---|---|---|
| அ) | பள்ளிமாற்றுச் சான்றிதழ் | |
| ஆ) | கல்வித் தகுதிச்சான்று (SSLC Mark sheet) | |
| இ) | இருப்பிட சான்றிதழ் (ஆதார் அட்டை/வாக்காளர் அடையாள அட்டை/ குடும்பஅட்டை/ வீட்டுவரி ரசீது) | |
| ஈ) | சாதிச் சான்றிதழ் | |
| உ) | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில்) | |

**உறுதிமொழி**

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள் :

விண்ணப்பதாரர் கையொப்பம்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை சமர்ப்பிக்க வேண்டும்.